


33 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 33 | பாலம்: 22 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2023

# இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கை

ஒன்றாறியோ மாகாண அரசின் நிதி அமைச்சர் பீட்டர் பெத்லென்ஃபால்வி (Bethlenfalvy) 2023 நொவம்பர் 02இல் ஒன்றாறியோ மாகாணச் சட்டமன்றத்தில் இலையுதிர் காலப் பொருளாதார அறிக்கையைச் சமர்ப்பித்தார். 2023 மார்ச் மாதத்தில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது தற்போதைய நிதியாண்டான 2023-2024ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் $1.3 பில்லியன் துண்டுவிழும் தொகையாக இருந்தது. ஆனால், இந்த இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையில் இத்துண்டு விழும் தொகை நான்கு மடங்குக்கு மேல் அதிகரித்து $5.6 பில்லியனாகியுள்ளது.

அதேபோல் 2023 மார்ச் மாதத்தில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது 2024-2025 நிதியாண்டில் ஒன்றாறியோ மாகாண வரவு-செலவுத் திட்டத்தில் $200 மில்லியன் மேலதிக வரவு எதிர்பார்க்கப்படு கிறது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த இலையுதிர் காலப் பொருளாதார அறிக்கையில் 2024-2025 நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மேலதிக வரவு மறைந்து $5.3 பில்லியன் துண்டுவிழும் என எதிர் பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஒன்றாறியோ மாகாண அரசு 2025-2026 நிதியாண்டிலேயே சமநிலைப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை எதிர்பார்க்கிறது. இவ் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையின்படி 2025-2026ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் $500 மில்லியன் மேலதிக வரவு எதிர்பார்க்கப்படுகிறது.

எட்டு மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை விட பற்றாக்குறை இவ்வாறு நான்கு மடங்குக்கு மேல் அதிகரித்ததிற்கு செலவினங்களில் எதிர்பாராது ஏற்பட்ட அதிகரிப்பும் தனிநபர் வருமான வரிகளின் வருவாயில் ஏற்பட்ட குறைவும் முக்கிய காரணங்கள் என மாகாண அரசு தெரிவித்துள்ளது. அத்துடன் கனடா வங்கியின் வட்டிவீதம் அதிகரித்ததும், பணவீக்க அதிகரிப்பும் இவ்வாறு வரவு-செலவுத்திட்டத்தில் பற்றாக் குறை அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தன.



“வரவு-செலவுத் திட்டத்தை சமநிலைப் படுத்துவதற்கான எமது இலக்கிலிருந்து நாங்கள் பின்வாங்கவில்லை. ஆனாலும், நாம் இருக்கும் சூழ்நிலையையும் நாம் அங்கீகரித்து நடக்க வேண்டும். எது வந்தாலும் அதை எதிர்கொள்ள நாங்கள் நம்மைத் தயாராக வைத்திருக்கிறோம்” என்று ஒன்றாறியோ மாகாண நிதி அமைச்சர் Peter Bethlenfalvy ஊடகங்களுக்குக் கூறினார்.

ஒன்றாறியோ மாகாணம் 2023-2024 நிதியாண்டிற்கான வருமானம் எதிர்பார்க்கப் பட்டதைவிட, $2.6 பில்லியனால் குறைந்துள்ளது. அதேபோல் 2023-2024 நிதியாண்டிற்கான செலவினங்கள் $2.3 பில்லியனால் அதிகரித்துள்ளது.

மாகாண அரசு பொருளாதார நிச்சயமற்ற நிலை ஏற்படும்போது பாவிப்பதற்காக “சேமிப்பு நிதி” ஒதுக்கி வைத்துள்ளது. இவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்ட சேமிப்பு நிதிக்கு இந்த இலையுதிர்கால பொருளாதார அறிக்கையில், மாகாண அரசு மேலதிகமாக $2.5 பில்லியனைச் சேர்த்துள்ளது. தற்போது இந்தச் சேமிப்பு நிதி $5.4 பில்லியனாக உயர்ந்துள்ளது. ஒன்றாறியோ மாகாண அரசின் இலையுதிர் காலப் பொருளாதார அறிக்கையின் சிறப்பு அம்சம் மாகாண அரசு உருவாக்கியுள்ள “ஒன்றாறியோ உள்கட்டமைப்பு வங்கி” (Ontario Infrastructure Bank) ஆகும். மாகாண அரசு இதற்கு $3 பில்லியனை ஒதுக்கியுள்ளது. ஒரு சபையால் (board) நிர்வகிக்கப்படும் இந்தப் புதிய நிறுவனம் புது உள்கட்டமைப்புத் திட்டங்களிற்கு அதுவும் குறிப்பாக நீண்டகாலப் பராமரிப்பு, எரிசக்தி மற்றும் நியாயமான விலையில் கட்டப்படும் வீடமைப்புத் திட்டங்களுக்கு முதலீடு வழங்கும்.

இந்த வங்கி முதலீட்டாளர்களுக்கு மிகவும் வசதியான நிதி விதிமுறைகளை வழங்கு வதுடன் நீண்டகால உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஈடுபடும் நிறுவனங்களிற்குப் பணச்சிக்கல்களால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கும். இதனால் இத்தகைய திட்டங்களுக்கு அரசாங்கம் நிதி உதவி வழங்கும் தேவை தவிர்க்கப்படும். அரசு பொதுமக்களுக்கு வழங்கும் சேவை தடைப்படாது தொடர இது வழிவகை செய்யும்.

“உலகெங்கிலும் உள்ள இதேபோன்ற நிறுவனங்களின் அமைப்பைப் பின்பற்றி உருவாக்கிய இந்த வங்கி நம்பகமான முதலீட்டாளர்களை ஈர்க்கும். அவர்களது முதலீடு மக்களுக்குத் தேவைப்படும் பல அத்தியாவசிய உள்கட்டமைப்புக்களை உருவாக்க வழிவகுக்கும். அரசின் பணத்தில் மட்டும் இவ்வாறான உள் கட்டமைப்புகள் உருவாக்குவது இயலாத காரியம்” என்று நிதியமைச்சர் ஊடகங் களுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், “Maple Eight எனப்படும் உலகில் மிகவும் செல்வாக்கு மிக்க கனடாவின் ஓய்வூதிய அமைப்பு இந்த ஒன்றாறியோ உள்கட்டமைப்பு வங்கியில் முதலீடு செய்ய வாய்ப்புக்கள் உள்ளது”

தொடர்ச்சி 05 பக்கம்














2023
EXCLUSIVE INCENTIVES
Registration:
647-296-0596
THE GREATEST SALE
EXCLUSIVE INCENTIVES
ONE DAY ONLY!
FEATURING
THE 9HUNDRED
SIGNATURE RESIDENCES
THOMPSON TOWERS
THE POST
THE FIFTH
HORSESHOE RESIDENCES
MUSKOKA BAY RESORT
fourme
Tricycle
Up to 75K in CASH back!
1.9% Mortgage for 2 Years!
Extended Deposit Structures!
Positive Cash Flows!
5% Down Programs!
Free Assignments!
Right to Lease during occupancy!
& More!
PARA TISIKULASINGAM
Sales Representative
(647) 296-0596
www.ParaCity.ca
HOMELIFE
HIGHER STANDARDS
HOME LIFE / GTA REALTY INC.,Brokerage*
*Independently Owned and Operated
5215 Finch Ave E, Unit 203, Toronto, ON MIS 0C2
O:416.321.6969 | F: 416.321.6963



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# தேர்தலை நோக்கமாகக் கொண்ட வரவு செலவுத் திட்டம்




நிதியமைச்சர் என்ற நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை கடந்த 13ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார். "வலுவான எதிர்காலத்திற்கான முன்னுரை" என்ற தொனிப்பொருளில் இந்த வரவு செலவு திட்டம் சமரப்பிக்கப்பட்டுள்ளது.

பொதுவான பார்வையில் இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஜனாதிபதி சிறந்த, கவர்ச்சியான விடயங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளார் என்றே தெரிகின்றது. எனினும், இதனை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த முடியுமா? என்கின்ற கேள்வியும் எழுகின்றது. கடந்த வருடம் வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட 90 வீதமானவை இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்முறை வரவு செலவுத் திட்டம், நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் மற்றும், தற்போதைய சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப புதிய பொருளாதார அடித்தளத்தை அமைக்கும் வரவு செலவுத் திட்டம் என சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தேர்தல் வெற்றியை விட நாட்டின் வெற்றியே தனக்கு முக்கியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊழியர்களுக்கு தற்போதுள்ள 7,800 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 2024 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மேலும் 10,000 ரூபாவால் உயர்த்தப்படும் என்று வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளமை அரச ஊழியர்களுக்கு சற்று மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும். ஆனால், தனியார் துறை ஊழியர்கள் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அரச துறையைக் காட்டிலும் பல இலட்சம் பேர் தனியார் துறையில் சேவையாற்றுகின்றனர். தனியார் துறை தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படவில்லை. இதனை பிரதான குறைப்பாடாக கருத வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ் டி சில்வா சுட்டிக்காட்டுகின்றார்.



சம்பள உயர்வு கோரி அரச ஊழியர்கள் போராட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்களின் போராட்டங்களால் அரசாங்கத்திற்கு பாரிய இழப்பும், தலையிடியும் ஏற்பட்டது. அதனாலேயே அவர்களின் கோரிக்கைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதனை வரவேற்றாலும் கூட தனியார் துறை ஊழியர்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமை குறைபாடு என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இதனை விடவும், சாதாரண மக்கள் எதிர்பார்ப்பது தங்கள் வாழ்வாதாரத்திற்கான திட்டங்களையே. தொழில் வாய்ப்பு, தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமைகளிலிருந்து விடுதலை, மின் கட்டணம் போன்ற கட்டணங்களை அதிகரிக்காமை, அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்படல் போன்றவற்றையே. சாதாரண மக்களின் இவ்வாறான எதிர்பார்ப்புக் குறித்து இந்த வரவு செலவு திட்டத்தில் எதுவும் இல்லை.

மலையகத்தைச் சேர்ந்த 89 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய பத்து வருட பல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் 2024இல் ஆரம்பிக்கப்படும் என்றும் அதற்காக 2024ஆம் ஆண்டில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்றும் வரவு செலவு திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

தோட்டத்தொழிலாளர்களுக்கு அரசாங்கம் இலவச காணிகளை வழங்குவதாக அறிவித்துள்ளமையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வரவேற்றுள்ளார்.

இதற்காக 4 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில், ஒவ்வொரு தோட்டத் தொழிலாளர் குடும்பத்திற்கும் சொந்த நிலம் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 2024ஆம் ஆண்டிற்கான 10 பில்லியன் ஒதுக்கீட்டின் மூலம், மலையகத்தின் வாழ்க்கைத் தரம் மற்றும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நாட்டில் மிகவும் அடிமட்டத்திலிருக்கும் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கான முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படுமானால் அது வரவேற்கத்தக்கதே.

இவை இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் என்னவெல்லாம் உள்ளது என்பதைப் பார்ப்போம்.

வடக்கு கிழக்கில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முரண்பாடுகள் முடிவிற்கு வந்து இதுவரை மீள்குடியேற்றம் செய்யப் படாத இடங்களுக்காக 2000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நன்னீர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்திக்காக 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது என்றும், யாழ்ப்பாணத்தில் நிலவும் நன்னீர் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படை பணிகளுக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தை உள்ளடக்கி புதிய முதலீட்டு வலயம் நிறுவப்படவுள்ளதாகவும், ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, கண்டி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கடற்றொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்க தனியார் துறையுடன் இணைந்ததாக திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க 1500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தேர்தலுக்கான வரவு செலவுத் திட்டமல்ல நாட்டை முன்னோக்கி நகர்த்திச் செல்லும் திட்டம் என்று ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான ரணில் விக்ரமசிங்க கூறினாலும், இதனை தேர்தலுக்கான வரவு செலவுத் திட்டம் என்றே கருதக் கூடியதாகவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்ற பொதுத் தேர்தலும் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார். இதில், வடக்கு கிழக்கு மற்றும் மலையகத் தமிழரின் வாக்குகளை பெற்றுக்கொள்வது ரணில் விக்ரமசிங்கவின் பிரதான நோக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## GTAஇல்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

விட்டன. புதிய நிறுவனங்கள், பெரிதான மாற்றங்களை சவால் கொள்வதில் ஏற்படும் நெருக்கடிகளால், சில கட்டிடத் தொகுதிகள் முற்றாக நீக்கப்பட்டு விட்டன.

கடந்த வருடம் (2022இல்) மத்திய வங்கி வட்டி வீதத்தை அதிகரிக்க தொடங்க, ஆதன வியாபாரம் குறிப்பாக, புதிய மனை வியாபாரம் இறங்கத் தொடங்கியது. எனினும், செப்ரெம்பர் 2023, இறுதிவரை 9568 மனைகளே விற்கப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டின் மூன்றாம் கால் பகுதியில் ரொறொன்ரோவில் சராசரி சதுர அடியின் விலை $1,638ஆகக் காணப்பட்டது. ஆனால், ரொறொன்ரோவிற்கு வெளிப்பகுதியில் (City's suburbs) பகுதியில் $1,112 சதுரஅடி என்ற விலையில் விற்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய கடந்த இரு வருடங்களாக மொத்தமாக 83 புதிய அடுக்குமாடி மனைத் தொகுதிகள் சந்தைப்படுத்தப்படவில்லை. இவை மொத்தமாக 28,428 அடுக்கு மனைகளாகும். இதன் பாதிப்பு எதிர்காலத்தில் தெரியவரும்.



இன்றைய எண்ணிக்கையில் புதியவர்கள் நாட்டிற்கு வந்து கொண்டேயிருந்தால், 2027-2028ஆம் ஆண்டிற்கு பிறகு வாடகையில் மேலும் அதிகரிப்பு ஏற்படுவதனை தவிர்க்க முடியாமலே இருக்கும். அத்துடன் விலையிலும் மாற்றத்தை எதிர்பார்க்கலாம்.

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# இலையுதிர்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

என்றார்.

பழமைவாதக் கட்சி அரசு அடுத்த 10 ஆண்டுகளில் $185 பில்லியனை நீண்டகால உள்கட்டமைப்புத் திட்டங்களை உருவாக்க முதலிட உள்ளது குறிப்பிடத்தக்கது.

இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வேறு சில முதலீடுகளைப் பார்ப்போம்.

புதிய வீட்டு வசதிகளை உருவாக்க நீர்வழங்கலை வசதி செய்து கொடுக்க $200 மில்லியனை மூன்று ஆண்டு களுக்கு ஒதுக்கியுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் புதிய வீடமைப்புத் திட்டங்களை உருவாக்க முக்கியமாகத் தேவைப்படும் நீர், கழிவுநீர் மற்றும் மழைநீர் திட்டங்களுக்கு இப்பணத்தைப் பெற்று அவற்றை புதிதாக அமைக்கலாம். ஏற்கனவே உள்ளவற்றை மேம்படுத்தலாம் அல்லது பழுதுபார்க்கலாம்.

இந்த முதலீடானது மாகாண அரசு ஏற்கனவே அறிவித்துள்ள "விரைவில் உள்கட்டுமானப் பணி" நிதிக்கு முதலிட்டுள்ள $1.2 பில்லியனை விட மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியாகும். இவ் இரண்டு முதலீடுகளும் மாகாண அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1.5 மில்லியன் புதிய வீடுகளை கட்ட ஆரம்பித்து வைக்க வழிசமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாகாண அரசு இந்த இலக்கை அடைய தனியார் முதலீடுகளையே பெருமளவில் நம்பியுள்ளது.

சுகாதார உள்கட்டமைப்பில் அடுத்த 10 ஆண்டுகளில் $48 பில்லியனை முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 3,000 புதிய படுக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக 50இற்கு மேற்பட்ட மருத்துவமனைத் திட்டங்கள் அடுத்த 10 வருடத்தில் உருவாக்கப்பட உள்ளது.



Peter Bethlenfalvy, Ontario's Minister of Finance

2019ஆம் ஆண்டில் இருந்து மேற்கொண்டு வரும் நீண்டகாலப் பராமரிப்பு வசதிகளை ஏற்படுத்த $6.4 பில்லியன் முதலிடப்பட உள்ளது. இதன்மூலம் 2028ஆம் ஆண்டிற்குள் 30,000இற்கு மேற்பட்ட நீண்டகாலப் பராமரிப்பு படுக்கை வசதிகளை உருவாக்கவும் 28,000இற்கும் மேற்பட்ட நீண்டகாலப் பராமரிப்பு படுக்கை வசதிகளை மேம்படுத்தவும் முடியும்.

அடுத்த 10 ஆண்டுகளில் புதிய பாடசாலைகளைக் கட்டவும், குழந்தைப் பராமரிப்பு இடங்களை உருவாக்கவும் மற்றும் பாடசாலை உள்கட்டமைப்புகளை நவீனமயப்படுத்தவும் $22 பில்லியன் முதலிடப்பட உள்ளது. 2023-2024 நிதியாண்டில் மட்டுமே 21 புதிய பாடசாலைகள் மற்றும் ஏற்கனவே உள்ளவற்றை புதுப்பித்தும் அமைக்கப்பட உள்ளது. இதன்மூலம் 7,000 புதிய மாணவர்களுக்கு இடம் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றில் 6 பிரஞ்சு மொழிப் பாடசாலைகளாகும்.

2026ஆம் ஆண்டிற்குள் 86,000 புதிய குழந்தை பராமரிப்பு இடங்கள் உருவாக்கப்படும். இந்த நிதியாண்டு முடிவடைவதற்குள் 23,000 புதிய குழந்தை பராமரிப்பு இடங்கள் உருவாக்கப்பட உள்ளன. இவற்றுள் 1,500 குழந்தை பராமரிப்பு இடங்கள் பாடசாலைகளில் உருவாக்கப்பட்டுள்ளன.



Peter Bethlenfalvy, delivers the 2023 economic outlook and fiscal review

Thanks: Chris Young / The Canadian Press

ஒன்ராறியோ மாகாணத்தில் இருக்கும் உற்பத்தியாளர் களுக்கு அவர்களது செலவைக் குறைக்கவும், புதிய கண்டுபிடிப்புகளைச் செய்யவும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு $780 மில்லியன் வரிக் கழிவாக வழங்கப்பட உள்ளது.

மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களின் உதிர்ப் பாகங்களின் உருவாக்கத்தில் ஒன்ராறியோ மாகாணத்தை உலகளாவிய ரீதியில் முன்னிலைப்படுத்த கடந்த மூன்று ஆண்டுகளில் முதலீட்டாளர்களிடம் இருந்து $26 பில்லியன் பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களுக்கான மின்சாரக் கலங்களை (Battery) உற்பத்தி செய்ய ஒன்ராறியோவின் நிலை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

Darlington மற்றும் Bruce அணுமின் நிலையங்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்துதல் செய்வதன்மூலமும், Pickering அணுமின் உற்பத்தி நிலையத்தை 2026ஆம் ஆண்டுவரை தொடர்ந்து செயற்பட வைப்பதன் மூலமும் ஒன்ராறியோ மாகாணத்தின் தூய்மையான எரிசக்தி வளத்தைக் கட்டியெழுப்புவதுடன் வளர்ந்து வரும் மின்சாரத் தேவையையும் பூர்த்தி செய்தல்.

மாகாண அரசின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கைக்குக் கருத்துத் தெரிவித்த புதிய ஜனநாயகக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் Catherine Fife, "பொருளாதார நிச்சயமற்ற நிலை ஏற்படும்போது பாவிப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள சேமிப்பு நிதிக்கு இந்த அரசு மேலதிக பணத்தை ஒதுக்கியது ஒரு பொறுப்பற்ற செயல். ஒன்ராறியோ மாகாணத்தில் மக்கள் பாதிக்கப்படும்போது இவ்வாறு பணத்தை ஒதுக்குவது தேவையற்றது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட பில்லியன்களை




Ontario's 2023 Fall Economic Statement

வாழ்க்கைச் செலவு மற்றும் வீட்டு நெருக்கடிகளைத் தீர்க்க முதலிடப் பயன்படுத்தியிருக்க வேண்டும். மக்கள் சுகாதாரம், மருத்துவ உதவியாளர்கள், தாதிமார் போன்ற முக்கியமான சேவைகளில் உடனடியாக முதலிடாமல் இவ்வாறு பணத்தைப் பதுக்கி வைப்பது தவறு" என்று கூறினார்.

இந்தப் பொருளாதார அறிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த லிபரல் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் Stephanie Bowman, "இவ் அறிக்கையில் பழமைவாதக் கட்சியின் பழைய கொள்கைகளின் மீள் அறிவிப்பே காணப்படுகிறது. அத்துடன் தற்போது தேவையற்ற இன்னொரு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. ஒன்ராறியோ வில் வாழும் மக்கள் இந்தப் பொருளாதார அறிக்கையால் நேற்று இருந்ததைவிட, எதுவும் புதிதாக இன்று பெறவில்லை" என்றார்.

இந்த இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையை மாகாண அரசு வெளியிடும் முன்னர் புதிய ஜனநாயகக் கட்சியும், லிபரல் கட்சியும் மாகாண அரசிடம் 2018இல் திரும்பப் பெறப்பட்ட வாடகை கட்டுப்பாடுகளை மீண்டும் அமல்படுத்துமாறு கேட்டிருந்தன. மாகாண அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை.

# 'பெண்கள் மற்றும் பாலின சமத்துவம் கனடா' - டாக்டர் மெலனி ரட்ணம்

கனேடிய அரசு முதல் தமிழ் கனேடியனை, 'பெண்கள் வரலாறு மாதத்தில்' கொண்டாடியது. இந்த அங்கீகாரம் டாக்டர் மெலனி ரட்ணம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உட்புரிவில் சமத்துவத்திற்கு தன்னை அர்ப்பணம் செய்துகொண்டதற்காகும்.

கனடிய அரசாங்கத்தின் 'பெண்கள் மற்றும் பாலின சமத்துவம் கனடா' (Women And Gender Equality Canada -WAGE) பெண்களின் வரலாற்று மாதத்திற்காக டாக்டர் மெலனி ரட்ணத்தை இந்த ஒக்ரோபர் 2023இல் அங்கீகரித்திருக்கிறது. 1992 முதல் கனடிய அரசாங்கம் கனடியப் பெண்கள் மற்றும் சிறுமிகளின் சாதனைகளை சிறப்பித்துக் காட்டியிருக்கிறது. இந்த வருடம், WAGE என்ற கருப்பொருளில், தன் பார்வை மூலம் "பெண்களின் பன்முகத்தன்மையை கொண்டாடுதல்" பல்வேறு பின்னணியில் பல்வேறு துறைகளில் 11 கனடியப் பெண்களை தெரிவுசெய்திருக்கிறது. அவர்கள் மாற்றத்தை உருவாக்கி நன்கு திட்டமிட்டு நல்லதொரு எதிர்காலத்தை வளர்த்து வருகின்றனர். டாக்டர் ரட்ணம் அவர்கள் தான் வளர்ந்து, வாழ்ந்து, பணி செய்கின்ற




ஸ்காபரோவில் பலமான ஒரு வலுச் சேர்க்கும் வேரைக்கொண்டுள்ளார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)

## நாமும் நமது இல்லமும் 642

# GTAஇல் ஆதன வியாபாரம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969


GTA_ரொறொன்ரோ பெரும்பாகம்

**ஆதன வியாபாரம்**

| | 2022 SEPTEMBER | 2023 SEPTEMBER |
|---|---|---|
| | 4999 ஆதனம் | 4642 ஆதனம் |
| > வருடத்தில் ஆதன வியாபாரம் 7.1% இறங்கியுள்ளது | | |
| சராசரி விலை | 1.09 மில்லியன் | 1.12 மில்லியன் |
| > வருடத்தில் 3% சராசரி விலை அதிகரித்துள்ளது | | |

* கனடிய வங்கியின் வட்டி வீதம் 5.0%

* கனடிய முதன்மை வட்டி வீதம் 7.2%

புதிதாக நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் மற்றும் புதிய அடுக்குமனை வாங்கியவர்களின் நிலைமை இன்று மாறியுள்ளது.

ஏற்கனவே (4 அல்லது 5 வருடங்களிற்கு முன்பு) ஆதனங்கள் வாங்கியிருந்தவர்களின் மனைகள் இப்பொழுது வாங்கியவர்களிற்கு நிர்மாண நிறுவனங்களால் கையளிக்கப்பட்டு வருகின்றன.

வட்டிவீத அதிகரிப்பால் மாதாந்தக் கட்டுப் பணம், எதிர்பாராத அளவிற்கு அதிகமாகவே வந்துள்ளது. இரு வருடங்களிற்கு ஆதனம் (மனை) வாங்குவதற்காக, ஆரம்பப் பணம் கொடுத்து இருந்திருப்பர். ஏறக் குறைய இரு வருடங்களில் எதிர்பாராத அளவிற்கு ஏற்பட்ட வட்டி வீத அதிகரிப்பால், மாதாந்தக் கட்டுபணம் கட்டுக்கடங்காமல் அதிகரித்து விட்டது. இதனால் பலர் வாங்கிய மனைகளை விற்க எத்தனிப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

உதாரணமாக புதிதாகக் கட்டப்பட்ட சில ரொறொன்ரோ மனைகளின் சராசரி விலை $1200 - $1300 சதுர அடிக்கு விற்கப்பட்டது. மனையை கையில் பெறும்போது மேலதிகமான செலவுகள் (Development fee and levies) கொடுக்கப்பட வேண்டிவரும். ஆனால், இந்தக் கட்டிடத் தொகுதியின் பகுதிக்கு அண்மையில் இருக்கும் புதிதாகக் கட்டிய கட்டிடத் தொகுதிகளில் ($1000 - $1100) என்ற விலையில் வாங்கக் கூடியதாக உள்ளது.

இதனால் ஏற்கனவே அடுக்குமாடி மனை நிர்மாணிக்கும் நிறுவனங்களிடம் வாங்கிய மனைகளை Assignmentஇல் விற்பதிலும் சில நெருக்கடிகள் காணப்படுகின்றது.

அதிகமான மனைகள் விற்கப்படாமல் அல்லது விற்க முடியாமல் சந்தையில் தேங்கியிருப்பதனைக் காணலாம். இதனால், அடுக்குமாடி மனைகளின் விலையில் இறக்கத்தைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆதனத்தை நிச்சயம் விற்க வேண்டும் என்ற நிலைமை இல்லாத ஆதன உரிமையாளர்கள் 2024இன் இளவேனிற் காலம் வரை பொறுத்திருப்பது, சில சமயம் நல்ல முடிவாக இருக்கலாம்!

வட்டி வீதமும் பலர் எதிர்பார்ப்பது போல, அடுத்த வருடத்தின் மத்தியிலிருந்து இறங்கக் கூடிய சந்தர்ப்பமே அதிகமாகக் காணப்படுகின்றது.

மேலும், புதிதாகச் சந்தைப்படுத்தும் ஆதனங்களும் அடுத்த வருடத்திற்காக தேங்கிக்கிடக்கின்றன. ரொறொன்ரோ ஆதன நிர்மாண நிறுவனங்கள் ஏறக் குறைய 14,000 மனைகளை இவ்வருடம் சந்தைப்படுத்தாமல் அடுத்த (2024) வருடத்திற்காகத் தள்ளி வைத்துள்ளனர்.

இந்த வருடம் 27,000 புதிய மனைகள் சந்தைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், இதுவரை 13,000 அலகுகளே/மனைகளே சந்தைப்படுத்தப் பட்டுள்ளது.



ஒருசில அடுக்குமாடித் தொகுதிகள் முற்றாக சந்தையில் இருந்து நீக்கப்பட்டு

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)




Condo for Sale

- Tridel Unit
  1 Bedroom + Den Condo for Sale
- Kennedy & Highway 401
  Den Can be used as Bedroom 24 hours Security
- Easy Access to Mall, Universities, Colleges, Highway etc...
- Available anytime.

For more info. Please Call....
GEORGE PARANTHAMAN
416.277.9044



HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969 * Independently owned and operated.

# சனாதனம் வேறு, இந்து மதம் வேறு
# ஆன்மிக சொற்பொழிவாளர் ராஜமூர்த்தி நேர்காணல்

## நேர்கண்டவர்: கண்ணன்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மகனும் தமிழ்நாட்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் - கலைஞர்கள் சங்கம் நடத்திய 'சனாதன ஒழிப்பு' மாநாட்டில் பேசியது இந்தியா முழுவதும் பேசு பொருளாகியுள்ளது. 2024ஆம் ஆண்டில் நடைபெற உள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் இந்த சர்ச்சையை பாஜக கட்சி பயன்படுத்திக்கொள்ளும் என்றும், இது வட இந்திய மாநிலங்களில் திமுக, காங்கிரஸ் அங்கம் வகிக்கும் 'இண்டியா' கூட்டணிக்கு நெருக்கடியை உருவாக்க லாம் என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். நீதிமன்றங் களில் இது தொடர்பான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், இந்த சர்ச்சை குறித்து, உதயநிதி ஸ்டாலின் தாய்மாமனும், மு.க. ஸ்டாலின் மனைவி துர்கா ஸ்டாலின் சகோதரருமான ஆன்மிக சொற்பொழிவாளர், மருத்தவர் ராஜமூர்த்தி நமக்களித்த பேட்டி;

**'சனாதன தர்மம் ஒழிக்கப்பட வேண்டும்' என்ற அமைச்சர் உதயநிதி பேச்சு சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக இந்து மதத்துக்கு எதிராகவும் இந்துக்களை இனப்படுகொலை செய்ய வேண்டும் என்பதாகவும் அவர் பேசியதாக வட இந்தியாவில் வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன? ஓர் ஆன்மிக சொற்பொழிவாளராக இந்த சர்ச்சை தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

உதயநிதி ஸ்டாலின் பேச்சை முழுமையாக நான் கேட்டேன். அவர் இந்து மதத்துக்கு உள்ளே சென்றோ அந்த மதத்தை தாக்கியோ பேசவில்லை. சனாதனத்தைத்தான் ஒழிக்க வேண்டும் என்று பேசியுள்ளார். அதாவது சனாதன தர்மம் என்னும் பெயரில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்க வேண்டும் என்றுதான் கூறினார். சனாதனம் என்பது வேறு, இந்து மதம் என்பது வேறு. அதை மறைத்துவிட்டு, இந்துக்களை இனப்படுகொலை செய்ய வேண்டும் என்பதாக உதயநிதி பேசிவிட்டார் என திரிக்கிறார்கள். இதன்மூலம் இந்துக்கள் அனைவரும் உதயநிதிக்கு எதிராக, திராவிட இயக்கத்துக்கு எதிராக மாறிவிடுவார்கள். இதனை வரும் அடுத்த தேர்தலில் பயன்படுத்தி, வாக்கு வங்கியாக அறுவடை செய்யலாம் என அவர்கள் தவறாக கணக்கிடுகிறார்கள்.

**சனாதன தர்மம் வேறு இந்து மதம் வேறு என்றால், இரண்டும் எந்த வகையில் வேறுபட்டது? சனாதன தர்மம் என்றால் என்ன?**



நீங்கள் சொல்லும் சனாதன தர்மம் என்பதில் உள்ள சனாதனம், தர்மம் என்ற இந்த இரண்டு சொல்களுமே தமிழ் சொல்கள் அல்ல. இரண்டும் முழுக்க முழுக்க வடமொழி சொல். சனாதனம் என்பதற்கு நிலையானது, என்றும் இருப்பது, மாற்ற முடியாதது, வகுக்கப் பட்டது என்றெல்லாம் பலவிதமாகப் பொருள் சொல்கிறார்கள். தர்மம் என்பதற்கு நேரான தமிழ் சொல் அறம். 'அறம் பாடிற்றே' என்று சங்க கால புலவர்கள் பாடியுள்ளார்கள். நீதி, நேர்மை, தானம், எல்லோருக்கும் நல்லது செய்வது, கருணை, அன்பு எல்லாமே அறம் என்பதில் அடங்கிவிடும்.

இந்த சனாதனம் வருவதற்கு முன்பு இங்கே பல்வேறு வழிபாட்டு முறைகள் இருந்துள்ளது. இன்றுள்ள இந்து மதம் என்பதை ஒரு கதம்பம் என்று சொல்லலாம். அதாவது ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு முறையை அடிப்படையாகக் கொண்டு இல்லாமல், பழங்காலத்தில் இங்கே நிலவிய பல வழிபாட்டு முறைகளின் தொகுப்பு. சிவனை வழிபடும் சைவம், சிவன் மனைவி பார்வதியை வழிபடும் சக்தி வழிபாடு, கொற்றவை வழிபாடு, திருமாலை வழிபடும் வைணவம், முருகனை வழிபடக் கூடியவர்கள், விநாயகரை வழிபடக்கூடியவர்கள். சூரியனை வழிபடக் கூடியவர்கள் என ஆறு வகை வழிப்பாட்டு முறைகள் இங்கே இருந்துள்ளன. 'அறு வகை சமயத்தார்' என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகரே பாடுகிறார்.

இன்னொரு பக்கம் நாட்டார் வழிபாடும் இருந்துள்ளது. தமிழ்நாட்டில் கொங்கு நாடு பக்கம் அண்ணன் சாமி, அதாவது பொன்னர் சங்கரை வழிபட்டார்கள். சைவ செட்டியார்கள் குல தெய்வம் காஞ்சி காமாட்சி. கிராம தேவதைகள், முனீஸ்வரன், கருப்பண்ண சாமி என பல நாட்டார் வழிபாட்டு முறைகளும் இங்கே இருந்துள்ளன. கருவாடு, கோழிக்கறி, ஆட்டுக்கறி, முட்டை, கள்ளு என்று அவன் என்ன சாப்பிடுவானோ அதையே கடவுளுக்குப் படையலாக வைத்து வழிபட்டு வந்துள்ளனர்.

இந்த நாட்டார் வழிபாட்டு முறைகளுக்கும் முதலில் சொன்ன ஆறு வகை வழிபாட்டு முறைகளுக்கும் ஆரியர்களுக்கும் தொடர்பு கிடையாது. அவர்கள் வழிபட்டது இந்திரன், வருணன், வாயு பகவானை.

இந்நிலையில், ஆரியர்கள் வழிபாட்டு முறைகளையும் ஏற்கெனவே இங்கே இருந்த வழிபாட்டு முறைகளையும் ஒன்றாக்கி இந்து என்ற மதப் பெயரை ஆங்கிலேயர்கள்தான் வைத்தார்கள். இது தங்கள் குல வளர்ச்சிக்கு உதவியாக இருந்ததால் அதையே பிடித்துக்கொண்டு பேசுகிறார்கள். ஆனால், தமிழர்களுக்கு உண்மை என்ன என்பது தெரியும். இந்த சனாதன சர்ச்சையிலும் அதுதான் நடக்கும்.

**ஆனால், வட இந்தியாவில் இது பேசு பொருளாகியுள்ளதே?**

தமிழர் உணர்ந்த உண்மையை இந்தியா முழுவதும் பரப்ப ஒரு வாய்ப்பை அவர்களே உருவாக்குகிறார்கள். இது அவர்களுக்குதான் எதிராக முடியும், தமிழ்நாட்டில் நடந்தது போல.

**தாய் மாமன் உறவு என்பது தமிழ் பாரம்பரியத்தில் மிக முக்கியமானது. ஒரு தாய் மாமனாக நீங்கள் தூக்கி வளர்த்த பிள்ளை உதயநிதி. அவரது இன்றைய வளர்ச்சியை எப்படி பார்க்கிறீர்கள்?**

நான் எட்டாவது, ஒன்பதாவது படிக்கும் காலங்களில் உதயநிதி கைக் குழந்தை. எங்கள் வீட்டுக்கு அக்கா வரும் போதெல்லாம் உதயநிதியை தூக்கிக் கொண்டு திரிவேன். நான் சென்னை மருத்துவக் கல்லூரியில் படிக்க வரும்போது உதயநிதி டான் பாஸ்கோ பள்ளிக்கூடம் சென்று கொண்டிருந்தார். பலநாள் நான்தான் பள்ளியில் கொண்டு போய் விடுவேன். சினிமா பார்க்க தியேட்டர்களுக்கு அழைத்துக்கொண்டு போவேன். அவர் திமுகவின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் அளவு இன்று வளர்ந்துள்ளதைப் பார்க்கும்போது மிகப் பெருமையாக இருக்கிறது.




## நானிலம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

சுமையைத் தாங்க முடியாமல் கிளைகள் முறிந்தாலும் முறிந்து விடும். அல்லது அப்பழங்கள் எல்லோர் கண்ணுக்கும் தெரிவதால் அவற்றை யாரேனும் கவர்ந்து கொண்டு போனாலும் போய் விடுவார்கள். இந்த இயற்கை நிகழ்ச்சியை நீ நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

என் தலைவியின் உயிர் அந்தப் பலாமரத்தின் கிளையைப் போல மிகவும் சிறியது. அவள் கொண்டிருக்கும் காதல் மிகவும் பெரியது. அவளுடைய உயிரால் தாங்க முடியாத அளவுக்குப் பெரியது. ஆதலால் அவள் உயிருக்கு ஆபத்து வந்தாலும் வரலாம் அல்லது அவளை வேறு யாருக்கேனும் அவளுடைய பெற்றோர் மணம் செய்து கொடுத்தாலும் கொடுக்கலாம்.

பலாப்பழத்தைப் பிறர் கவர்வது போல அவளையும் பிறர் மணந்து கவர்ந்து செல்லலாம். ஆதலால் இன்னும் காலந் தாழ்த்துவது கூடாது. அவளை மணந்து கொள்ளத்தக்க காலத்தைக் கைக்கொள்ள வேண்டும்."

நட்பின் பெருமை பற்றி குறுந்தொகையில் வரும் பாடல் சிலவற்றையும் கடந்த இதழ்களில் உரையாடினோம்.

தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் தோழியின் பங்கு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்பதை குறுந்தொகையில் உள்ள சில பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நட்பின் பெருமை இவற்றால் நன்கு புலப்படுகிறது.

சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

# நானிலம் போற்றும் நட்பு - 32



- அகணி -
authorakani@gmail.com

"உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்." (அதிகாரம் தீ நட்பு, குறள் 813) என்ற குறளிற்கு "கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பைக் கொள்ளாமல் பெறுகின்ற பொருளைக் கொள்ளும் விலை மகளிரும், கள்வரும் ஒரு நிகரானவர்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நட்பால் கிடைக்கும் பயனை எடைபோட்டுப் பார்க்கும் நண்பரும், பரத்தையரும் திருடரும் சமமானவர்கள்." என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"சுயநலம் கருதும் நட்பினர், வேசையர், கள்வர் இவர்கள் ஒரு தன்மையர்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"பயனை எண்ணிப்பார்த்து அதற்காகவே நட்புக் கொள்பவரும், விலைமகளிரும், கள்வரும் ஆகிய இந்த மூவரும் ஒரே மாதிரியானவர்களே ஆவார்கள்" என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

சுயநலம் கொண்ட நண்பரும் பரத்தையரும், திருடரும் சமமானவர்கள் என்ற கருத்தை இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் பதினாறாவது பாடலைக் கவனிப்போம்.
இந்தப் பாடலைப் பாடியவர் பெருங்கடுங்கோ என்னும் புலவர். பொருள் தேடச் சென்ற தலைவனை எண்ணி வருந்தியிருக்கும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுவதாக அமைந்திருக்கும் பாடல் இது பாலைத்திணையைச் சார்ந்தது.

"உள்ளார் கொல்லோ! தோழி! கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உசிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்கால் பல்லி தன்துணை பயிரும்
அம்கால் கள்ளிஅம் காடு இறந்தோரே."

இந்தப் பாட்டின் பொருள்:
"தோழியே! அவர் நம்மை நினைப்பாரோ, நினைக்க மாட்டாரோ, விரைவில் வருவாரோ, வரமாட்டாரோ என்று எண்ணிக் கவலைப்படாதே. அவர் செல்லும் வழியிலே கட்டாயம் அவர் உன்னைப் பற்றி நினைப்பார். அந்நினைப்பின் காரணமாக, அவர் விரும்பிச் சென்ற காரியத்தை விரைவில் முடித்துக் கொண்டு திரும்புவார்.

அவர் போகும் பாலைவன வழியிலே பல கள்வர்கள் உண்டு. அவர்கள் தொழில் வழிச்செல்வோர் வைத்திருப்பதைப் பறித்து உண்பதுதான். வழிப்போக்காளரைப் பயமுறுத்துவதற்காக அவர்கள் அம்பும் வில்லும் வைத்திருப்பார்கள். அவர்களுடைய அம்புகள் இரும்பினால் செய்யப்பட்டவை. மழுங்கிப் போன அம்புகளைத் திருத்துவதற்காக, அவற்றை அவர்கள் தங்கள் கை விரலின் நகங்களால் புரட்டிப் பார்ப்பார்கள். அப்பொழுது அம்புகள் ஒன்றோடொன்று உரசுவதனால் ஒரு வகையான ஓசையுண்டாகும்.

அந்தப் பாலை நிலத்திலே வளர்ந்திருக்கும் கள்ளி மரங்களிலே பல்லிகள் பல வாழும். ஆண் பல்லிகள் தம் பெண் பல்லிகளைத் தம்மிடம் அழைக்கும். அக்குரல் அம்புகளைப் புரட்டுவதனால் எழும் ஓசையைப் போலக் கேட்கும். ஆண் பல்லிகள் இவ்விதம் தம் பெண் பல்லிகளை அழைக்கும் ஒலியைக் கேட்ட நம் தலைவர் எப்படி நம்மை நினைக்காமலிருக்க முடியும்? கட்டாயம் உன்னை நினைத்தே தீர்வார். உன்னிடம் திரும்பி வருவதற்கு முனைவார்."

தலைவன் பொருளீட்டுவதற்காகப் பிரிந்து போயிருக்கின்றான். "நமது காதலன் பொருளைத் தேடிப் போகும் வழியிலே நம்மை நினைப்பவர்கள் பொருள் மேல் பேராசை வைத்தவர்கள் வேறு எதையும் எண்ண மாட்டார்கள் என்று சொல்லுவார்கள். நமது காதலரும் இவர்களைப் போல் இருப்பாரோ" என்று தலைவி கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.



தலைவியின் இக்கவலையைக் கண்டறிந்த தோழி அவளுக்கு ஆறுதல் உரைகள் சொல்லுவதாக இந்தப் பாடல் உள்ளது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் பதினெட்டாவது பாடலைக் கவனிப்போம்.

இந்தப் பாடலைப் பாடியவர் கபிலர். காதலனும், காதலியும் களவு மணத்திலே கருத்தொருமித்து வாழ்கின்றனர். அடிக்கடி இரவு நேரத்திலே அவனும், அவளும் ஒன்று சேர்ந்து உவகையடைகின்றனர். ஒரு நாள் இரவில் தலைவன் காதலியைச் சந்தித்து விட்டுத் திரும்பும்போது தோழி அவனைப் பார்த்து "நீ விரைவில் தலைவியை மணந்து கொள்ள வேண்டும்" என்று தன் கருத்தையும், தலைவியின் நிலையையும் வெளியிட்டாள். இது குறிஞ்சித்திணையைச் சார்ந்தது.

"வேரல் வேலி வேர்கோள் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார் அஃது அறிந்திசினோரே. சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்
உயிர் தவச் சிறிது! காமமோ பெரிதே!"

இந்தப் பாட்டின் பொருள்:

காதல் கொண்ட ஒரு தலைவனும், தலைவியும் களவு மணம் புரிந்து கொண்டனர். அவர்கள் இரவிலே குறித்த இடத்திலே அடிக்கடி சந்திக்கின்றனர். இவ்வாறு இன்பத்தேன் அருந்தி இன்புற்று வாழ்கின்றனர். இந்தக் களவு மணம் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து நடந்து வருகின்றது. இதைத் தோழி ஒருத்தி தான் அறிவாள். அவளும் தன் தலைவியின் நடத்தைக்கு உடந்தையாகவே இருந்தாள்.

இந்தக் களவு மணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் தன் தலைவியும், அவள் காதலனும் பலருங்காணக் கற்பு மணவாழ்வை மேற்கொள்ள வேண்டும் அவர்கள் அன்புடன் இணைந்து நின்று நடத்தும் இல்லற வாழ்வைக் கண்டு மகிழ வேண்டும் என்பது தோழியின் உள்ளத்திலே கிடந்த ஆசை.

அவள் தன் உள்ளக் கருத்தைத் தலைவனிடம் உரைக்கக் காலம் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் இரவிலே, தலைவன் குறித்த இடத்திற்கு வந்து தலைவியைச் சந்தித்து விட்டுத் திரும்பினான். அப்பொழுது தோழி அவனை நிறுத்தி, அவனிடம் தன் மனக்கருத்தைத் தெரிவித்தாள். தோழி தலைவனிடம் சொல்லியதை எடுத்துக்காட்டுவதே இப்பாடல். இந்தப் பாட்டின் பொருள்:

"மலை நாட்டின் தலைவனே! நான் உன்னிடம் ஓர் உண்மையைச் சொல்ல வேண்டுமென்று நீண்ட நாட்களாக நினைத்திருந்தேன். இன்றுதான் அதற்குத் தகுந்த வாய்ப்பு நேர்ந்தது. நான் சொல்லுவதை நீ நன்றாகச் சிந்தித்துப் பார்த்து விரைவில் நல்ல முடிவுக்கு வரவேண்டும். காலந்தாழ்த்தினால் உனக்கும், என் தலைவிக்கும் பெரிய ஏமாற்றம் உண்டானாலும் உண்டாகலாம்.

மூங்கில் வேலி சூழ்ந்த உன்னுடைய மலைச்சாரலிலே வேரிலே பலாப் பழங்கள் பழுத்துக் கிடக்கும். வேரிலே இருப்பதனால் அப்பழங்கள் மரத்திற்குப் பாரமாகவும் இருக்க மாட்டா. எட்டியிருப்போர் கண்களுக்கும் அப்பழங்கள் காணப்படுவதில்லை. வழிநடப்போரும் அவற்றை எளிதிலே பார்க்க முடிவதில்லை. ஆகையால் அப்பழங்களைப் பிறர் கவர்ந்து கொள்ள வழியில்லை. அவை உனக்கும் உன் சுற்றத்தார்க்குமே பயன்படும்.

எம்முடைய மலைச் சாரலிலே பலாமரத்தின் சிறிய கிளைகளிலே பெரிய பழங்கள் கனிந்து தொங்குகின்றன. அவற்றைப் பலரும் பார்க்கின்றனர். அப்பழங்களின்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)




ஈழமுரசு
ஈழமுரசும் கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும் தமிழீழத் தேசியத்
தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின்
69
தலைவன்
பிறந்தநாள்
அதுவே
தமிழன்
நிமிர்ந்த நாள்!
வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்
அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா
இருப்பாய் தமிழா நெருப்பாய்!
AAROSAI
2023
நவம்பர்
26
ஞாயிறு
மாலை
5 மணி
இடம்:
TORONTO
METROPOLITAN CENTRE
3840, Finch Ave East;
Scarborough ON., M1T 3T4
(Kennedy & Finch)
MONTREAL
Le Château Royal
3500 Bd du Souvenir,
Lavel, Montreal
QC H7V 1X2
ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்
ஈழநாடு
குரல்
செந்தாமரை
உதயன்
விளம்பரம்
Krishna LIVE TELECAST
CANADA
timeFM
தமிழ் மிரர் Tamil Mirror
Toronto (647) 657-8566, (647) 783-3466, (587) 982-8829, (437) 224 7923
Montreal 438-483-1157
Yugam Media Inc

# லியோ - திரைவிமர்சனம்


ஆரணி ஞானநாயகன்

விஜய்யின் நடிப்பிலும் லோகேஷ் கனகராஜின் இயக்கத்திலும் இவ்வருடம் ஒக்ரோபரில் வெளியான படம் லியோ.





வட இந்தியாவில் தமிழரான பார்த்திபன் (விஜய்) தனது மனைவி சத்யா (திரிஷா) மற்றும் அவர்களது இரு பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார். தேநீர் கடை ஒன்றை வைத்திருக்கும் பார்த்திபனின் வாழ்க்கை மிகவும் சாதாரணமாகச் செல்கிறது.

ஆனால், ஒருநாள் சில அடியாட்கள் பார்த்திபனின் கடையைக் கொள்ளையடிக்க நுழைகின்றனர். அம்முயற்சியில் பார்த்திபனையும், அவரது மகளையும், அவருக்கு வேலை செய்பவரையும் கொல்ல முயற்சிக்கின்றனர்.

அதுவரை மிருகங்களைக் கூடக் கொல்ல விரும்பாத பார்த்திபன் தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு அடியாட்களுடன் சண்டை பிடித்து அவர்களது துப்பாக்கியால் அவர்களைக் கொல்கிறார்.

இதனால் ஏற்படும் வழக்கு விசாரணையில், பார்த்திபன் பிரபலமாகிறார். ஊடகங்களைத் தவிர்க்க முயன்ற பார்த்திபனின் புகைப்படம் ஊடகங்களில் வெளியிடப்படும்போது, அவர் கொன்ற அடியாட்களின் சொந்தக்காரர்கள் அவரைத் தேடி வருகின்றனர்.

இவர்களைவிட இன்னொரு ஆபத்தான கூட்டமும் அவரைத் தேடி வருகிறது. இவர்கள் யார்? ஏன் பார்த்திபனைத் தேடுகிறார்கள்? என்ற கேள்விகளுக்குப் பதிலை படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தில் சண்டைக்காட்சிகள் பெரும்பாலும் கதையுடன் பொருந்துவதால், பொழுதுபோக்கையும் தாண்டி நன்றாக அமைந்துள்ளன. அத்தோடு சண்டைக்குப் பின் கதாநாயகனின் மனநிலை, சட்டப்பிரச்சனை, பழிவாங்குதல் போன்ற பின்விளைவுகள் இங்கு நன்றாகக் காட்டப்படுகின்றன. இதனால் படத்தின் முதல்பாகம் மிகவும் விறுவிறுப்பாகச் செல்கிறது.

பார்த்திபனின் அடையாளம் கேள்விக்குறியாகும் போது அவரது குடும்பப் பிரச்சனையும் நன்றாகக் காட்டப்படுகிறது. இதில் திரிஷாவின் நடிப்பு நன்றாக இருக்கிறது. ஆனால், பிரபல நடிகைக்கு ஏற்ற கதாபாத்திரமாக இதற்குப் படத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று தோன்றுகிறது.

லோகேஷின் பிற இயக்கங்களான கார்த்தி நடிப்பில் வெளிவந்த 'கைதி' மற்றும் கமல்ஹாசனின் நடிப்பில் வெளிவந்த 'விக்ரம்' என்ற படங்களில் அறிமுகப் படுத்தப்பட்ட சில கதாபாத்திரங்கள் லியோ படத்தில் சில காட்சிகளில் வருகின்றன. ஆனால், இப்படங்களை பார்க்காதவர் களுக்கு லியோ படத்தை விளங்குவதற்கு இக்காட்சிகள் தடையில்லை.

இப்படத்தில் வரும் கழுதைப்புலி (hyena) CGI காட்சிகள் சிறப்பாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நல்ல கதை மற்றும் காட்சியமைப்புக் கொண்ட இப்படத்தை பொழுதுபோக்குப் படங்களைப் பார்க்க விரும்புவோர் பார்க்கலாம்.






# வஹீதா ரஹ்மான்: இந்திய திரையுலகை ஆண்ட தமிழச்சி!

**கண்ணன்**

இந்தியளவில் திரைத்துறையினருக்கு வழங்கப்படும் விருதுகளில் மிக உயர்ந்ததாகப் போற்றப்படுவது 'தாதா சாகேப் பால்கே வாழ்நாள் சாதனையாளர் விருது'. இந்த விருது இந்த ஆண்டு பாலிவுட் மூத்த நடிகை வஹீதா ரஹ்மானுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய குடியரசு தலைவரிடம் இருந்து இந்த விருதை சமீபத்தில் பெற்றார், வஹீதா ரஹ்மான். 1960_70களில் பாலிவுட் வெள்ளித்திரையை ஆண்ட வஹீதா ரஹ்மான், ஒரு தமிழச்சி என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் பிறந்தவர்!

செங்கல்பட்டு தொடக்கம் டில்லி _ ஒரு பிளாஷ்பேக்;

தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் வசித்த தக்னி முஸ்லிம் மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள் முகமது அப்துர் ரஹ்மான் _ மும்தாஜ் பேகம் தம்பதி. அப்துர் ரஹ்மான், அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியில் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றியவர். இந்த தம்பதிக்கு நான்கு மகள்கள். இவர்களில் கடைக்குட்டிதான் வஹீதா ரஹ்மான். 1938 பிப்ரவரி 3 அன்று பிறந்தார். சிறு வயதாக இருக்கும் போதே, இவரும் இவரது சகோதரிகளும் சென்னையில் பரத நாட்டியக் கலை பயின்றனர்.

பரத நாட்டியம் பயின்றாலும் உண்மையில் வஹீதாவுக்கு மருத்துவர் ஆக வேண்டும் என்றுதான் ஆசை. இந்நிலையில், வஹீதாவின் இளமைக் காலத்திலேயே அவரது தந்தை அப்துர் ரஹ்மான் இறந்து விடுகிறார். இதனால், வீட்டு பொருளாதார சூழ்நிலை ஒத்துழைக்காததாலும், அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போன காரணத்தினாலும், வஹீதாவால் அவரது குறிக்கோளை அடைய முடியவில்லை.

கற்றுக்கொண்ட பரதம் துணையுடன் சினிமாவில் நடனக் கலைஞராக நுழைந்தார், வஹீதா ரஹ்மான். 1955ஆம் ஆண்டு தெலுங்கில் வெளியான 'ஜெய்சிம்மா' படத்தில் நடிகையாக அறிமுகமானார். இதே ஆண்டு தெலுங்கில் வெளியான அக்கினேனி நாகேஸ்வரராவின் 'ரோஜுலு மராயி' (Rojulu Marayi) படத்தில் ஒரு நாட்டுப்புற பாடலில் மட்டும் நடனமாடினார். தொடர்ந்து தமிழில் எம்.ஜி.ஆர்., பி. பானுமதி நடிப்பில் வெளியான 'அலிபாபாவும் 40 திருடர்களும்' (1956) திரைப்படத்திலும் நடித்தார்.

இந்நிலையில், தற்செயலாக, இந்தி திரைப்பட இயக்குநரும் தயாரிப்பாளருமான குருதத் பார்வையில் வஹீதா பட்டது அதன்பின் அவரது வாழ்வையே மாற்றி விட்டது. குருதத் வாழ்க்கையில் ஒரு எருமை மாடு குறுக்கிட்டதன் வாயிலாகத்தான், அவர் வஹீதா ரஹ்மானை கண்டடைந்தார். குருதத்தும் அவருடைய நண்பர் அப்ரார் அல்வியும் ஒரு தயாரிப்பாளரை பார்க்க ஹைதராபாத் சென்றுள்ளனர். காரில் போகும்போது, முன்னால் ஒரு எருமை மாட்டு வண்டி வழி விடாமல் சென்று கொண்டிருந்தது. வழிவிட வேண்டி காரின் ஹார்னை ஆல்வி அழுத்தியபோது, எருமை மாடு மிரண்டு, திரும்பிப் பாய்ந்து காரை முட்டி சேதமாக்கியது. பலத்த சேதத்திற்குள்ளான காரை பழுதுபார்க்க 'ஒர்க் ஷாப்' எடுத்துச் சென்றுள்ளனர்.



இந்த விபத்தால் திட்டமிட்டபடி சந்திக்க நினைத்த தயாரிப்பாளரை சந்திக்க முடியவில்லையே என்ற விரக்தியில் ஆல்வியும் குருதத்தும் 'ஒர்க் ஷாப்' அருகில் இருந்த ஒரு விநியோகஸ்தரின் அலுவலகத்தில் காத்துக் கொண்டிருந்தனர். அப்போது, எதிர் பக்கத்தில் இருந்த ஒரு வளாகத்தில் பளிச் என மின்னல் போல் ஒரு பெண் நுழைவதை பார்க்கிறார்கள். அந்தப் பெண் 'ரோஜுலு மராயி' படத்தில் குருப் டான்ஸ் ஆடுவதற்காக சென்னையில் இருந்து ஹைதராபாத் வந்திருந்த வஹீதா ரஹ்மான்.

குருதத்துக்கு அவரை பிடித்துப் போகிறது. உடனே அப்பெண்ணை சந்தித்து அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள். இச்சம்பவத்தை குருதத் பற்றி ஆல்வி எழுதியுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1956ஆம் ஆண்டு ஹிந்தியில் குருதத் தயாரிப்பில் தேவ் ஆனந்த் நடிப்பில் வெளியான 'சிஐடி' படத்தில் வில்லியாக நடித்ததன் மூலம் பாலிவுட்டில் நடிகையாக அறிமுகமானார், வஹீதா ரஹ்மான். அடுத்த ஆண்டே குருதத் நடித்து இயக்கிய 'Pyaasa' (1957) படம் மூலம் கதாநாயகியானார்.

அதேநேரம் குருதத் வாழ்க்கையிலும் வஹீதா ரஹ்மான் நுழைந்து அது குருதத் தற்கொலை வரைக்கும் கொண்டு சென்றது. 'சிஐடி' படத்தில் நடிக்கும்போது இருவரும் நெருக்கமானார்கள். 'ப்யாஸா' படத்தில் குருதத்துக்கும் வஹீதாவுக்கு காதல் உச்சம் அடைந்தது. 'ப்யாஸா' படத்தில் குருதத்தும் வஹீதாவும் நடிக்கும் 'ஜானே க்யா' பாடலை பாடியவர், குருதத்தின் மனைவி கீதா தத்.

தனது மனைவி கீதா தத், காதலி வஹீதா ரஹ்மான் இருவருக்கும் இடையில் சிக்கினார், குருதத். அவரால் இந்த சூழலில் இருந்து விடுபட முடியவில்லை. குருதத்தும் வஹீதாவும் அடுத்து இணைந்து பணியாற்றிய 'காகஸ் கே பூல்' (1959) படம், ஒரு வெற்றிகரமான இயக்குநர் ஒரு பெண்ணிடம் காதல் வசப்பட்டு பின்னர் வீழ்ந்ததைப் பற்றியதாக இருந்தது. குருதத்தின் திருமண வாழ்க்கை ஒருபக்கமும், வஹீதா ரஹ்மான் பிற இயக்குநர்கள் இயக்கத்தில் நடித்த படங்களின் தொடர்ச்சியான வெற்றிகள் ஒரு பக்கமும் இணைந்து, குருதத் _ வஹீதா ரஹ்மான் காதலை பிரித்தது. இருந்தாலும் இருவரும் இணைந்து 1960ஆம் ஆண்டு வெளியான 'சாத்வின் கா சாந்தில்' வரை பணியாற்றினர். 1962ஆம் ஆண்டு வஹீதா நடிப்பில் வெளியான 'சாஹிப் பீபி ஔர் குலாம்' படம் 1963 பெர்லின் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டதை முன்னிட்டு இருவரும் பெர்லின் சென்றனர். அதன்பின்னர் பிரிந்தனர்.

இந்நிலையில், குருதத் தன்னை மாய்த்துக் கொண்டார். இதுவரைக்கும் குருதத் மரணத்தைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட வஹீதா ரஹ்மான் சொன்னதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



